DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 12/2022

Prosecution PW - 5

| Name | திரு. மூவேந்தன் | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1, A4 absent. 355 BNSS petition filed and allowed. A2,A3 present. A5 produced on PT Warrant.

முதல் விசாரணை

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.12.2019 ம்தேதி நாகப்பட்டிணம் NIB CID காவல்நிலையத்தில் தலைமை காவலாக பணியில் இருந்தபோது நாகப்பட்டிணம் கியூ பிரிவில் ஆய்வாளர் அருண்பிரசாத் என்பவர் தனி அறிக்கையுடன் NIB CID காவல்நிலையம் ஆஜர் ஆகி தடய பொருட்கள் மற்றும் எதிரிகள் மூன்று நபர்களை தடய பொருட்களை ஏற்றி வந்த வாகனங்கள் ஆகிவற்றை ஒப்படைத்தார். அதனை திருமதி. சாந்தகுமாரி ஆய்வாளர் அவர்கள் பெற்றுகொண்டு என்னையும் தலைமை காவலர் சீனிவாசன் மற்றும் என் முன்னிலையில் கஞ்சா மூட்டை 25 ஐயும் எதிரிகளையும் வாகனத்தையும் கைபற்றினார். 25 கஞ்சா மூட்டைகளும் மொத்தம் 692 கிலோ இருந்தது. 23 மூட்டைகளில் தலா 28 கிலோவும், இரண்டு மூட்டைகளில் தலா 24 கிலோ கஞ்சா இருந்தது. பின்னர் ஒவ்வொரு மூட்டையிலிருந்தும் மாதிரிக்காவும் பகுப்பாய்விற்காகவும் தலா 50 கிராம் வீதம் இரண்டு பாக்கெட்டுகளிலிருந்து எடுத்து பாலிதின் கவரில் போட்டு காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்தார். பின்னர் விவர சிலிப்பு எழுதி ஒட்டப்பட்டு SHO சீல் வைத்தார். அந்த சிலிப்பில் ஆய்வாளரும் எதிரிகளும் கையொப்பம் செய்தார். நாங்களும் கையொப்பம் செய்தோம். பின்பு எதிரிகள் மூவரையும், 21.00 மணிக்கு ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார். உதவியாக இருந்தேன். 23 மூட்டைகளில் ஒவ்வொரு மூட்டைகளிலும் 14 பொட்டலங்கள் தலா 2 கிலோ வீதம் இருந்தது. இரண்டு மூட்டைகளில் ஒவ்வொரு மூட்டைகளிலும் 12 பொட்டலங்கள் தலா 2 கிலோ வீதம் இருந்தது. ஒவ்வொரு மூட்டைகளிலும் இருந்த பொட்டலங்களை பிரித்து அந்த அந்த சாக்குபையில் கொட்டி மேலும் கீழுமாக கலக்கி ஒவ்வொரு மூட்டையிலிருந்தும் இரண்டு பொட்டலங்கள் மாதிரிக்காக எடுக்கப்பட்டது. மாதிரிக்கு எடுக்கப்பட்டது போக மீதமுள்ள கஞ்சா அந்த அந்த சாக்குமூட்டைகளில் வைத்து கட்டி சீல் வைக்கப்பட்டது. மாதிரி கஞ்சாக்கள் 50 பொட்டலங்கள் சா.பொ **27** முதல் **76.** கஞ்சா இருந்த 346 காக்கி பொட்டலங்களின் கவர்களை தனியாக வெள்ளை

சாக்கில் போட்டு கட்டி சீல் வைக்கப்பட்டது. அந்த காக்கி பொட்டலங்களின் கவர் மூட்டை சா.பொ **77**. பின்னர் மாதிரி கஞ்சாக்கள், மீதமுள்ள கஞ்சா, காக்கி பொட்டலங்கள் கவர் மூட்டை, SWARAJ MASTHA வாகனம் ஆகியவற்றை ஆய்வாளர் மகசரில் கைபற்றினார். அதில் நானும் தலைமை காவலர் சீனிவாசனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். காட்டபடும் 1.12.2019 தேதியிட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அதசாஆ **5**. பின்னர் எதிரிகளை குற்ற காரணம் ஆய்வாளர் கைது செய்து கைது நமூனா சார்வு செய்தார் அந்த கைது நமூனாவில் சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த கைது நமூனாக்கள் அதசாஆ **6** முதல் **8**. பின்னர் 1 முதல் 3 எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் தனிதனியாக பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும் தலைமை காவலர் சீனிவாசனும் கையொப்பம் செய்தோம். எதிரிகளும் கையொப்பம் செய்தார்கள். பின்னர் 02.12.2019 ம் தேதி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் சம்பவ இடம்சென்று சம்பவ இடத்தை காவல் துணை கண்காணிப்பாளர் என் முன்பாகவும், சீனிவாசன் முன்பாகவும், பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். 02.12.2019 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் அந்த பார்வை மகசர் அதசாஆ **9**. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

கியூ பிரிவு ஆய்வாளர் தடய பொருட்களையும் எதிரிகளையும் ஒப்படைக்கும்போது நான் நிலையத்தில் இருந்தேன். மதியம் சுமார் 1.30 மணிக்கு ஒப்படைத்தார். எல்லா சம்பிராதயமும் முடித்த பிறகு தான் ஆய்வாளர் சாந்தகுமாரி வழக்கு பதிவு செய்தார். அதசாஆ 5 கைபற்றுதல் மகசரில் 4 வது காலத்தில் கியூ பிரிவு ஆய்வாளர் அருண்பிரசாத் என்பவரிடமிருந்து பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் கியூ பிரிவு ஆய்வாளர் அருண்பிரசாத் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சா.பொ 27 முதல் 76 ல் குற்ற எண், சட்டபிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 22 மணிக்கு தயார் செய்யப்பட்டது. கைபற்றுதல் மகசரில் குற்ற எண், சட்டபிரிவு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதசாஆ 5 கைப்பற்றுதல்மகசர்தயார் செய்யப்பட்ட பிறகு தான் சா.பொ 27 முதல் 76 தயார் செய்யப்பட்டது. சா.பொ 77 காலி கவர் மூட்டையில் விவர சிலிப்பு எதுவும் ஒட்டவில்லை. 25 சாக்குமூடடைகள் என்ன வகையான சாக்குமூட்டைகள் மகசரில் சொல்லப்பட்டதா என்றால் சொல்லபடவில்லை . இதை நான் ஆய்வாளர் அல்லது காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையின்போது சொல்லவில்லை. 346 கஞ்சா பொட்டலங்கள் என்ன வகையான பேப்பரில் சுற்றப்பட்டது என்று எவ்வாறு சுற்றபட்டது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் துணை கண்காணிப்பாளர் தயார் செய்த பார்வை மகசரில் சம்பவ இடத்தை கியூ பிரிவு ஆய்வாளரோ அல்லது அவருடன் வந்த நபர்களோ அடையாளம் காட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் 1.30 மணிக்கு பிறகு தயார் செய்யப்பட்ட எந்த ஆவணங்களிலும் கியூ பிரிவு அலுவலகத்தை சேர்ந்த நபர்கள் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வடுவூர் சோதனை சாவடி பறவைகள் சரணாலயம்

ஆகியவை உள்ளது. அங்கிருந்த நபர்களை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் இல்லை. நான் முதுல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் எனக்கு தெரியாது என்றாலும் காவல்நிலையத்தில் தயாரித்துவைத்திருந்த ஆவணங்களில் நான் கையொப்பம்செய்துவிட்டு மேல் அதிகாரி கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்